செ.வெ.எண்:13/டிசம்பர் நாள்: 08.01.2016

# செய்திக்குறிப்பு

தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் தகவல் தொகுப்பினை நாளது வரை சரி செய்தல் மற்றும் தகவல் தொகுப்புடன் ஆதார் எண்ணை இணைக்கும் பணி எதிர்வரும் 18.01.2016 முதல் 05.02.2016 வரை நடைபெறவுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள சிறப்பாக இதற்கென கணக்கெடுப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இப்பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று உரிய படிவத்தில் விவரங்களைச் சேகரித்து குடும்பத்தலைவரின் ஒப்பத்தினை பெற்றுக் கொள்வார். அவர் தன்னுடன் ஏற்கனவே உள்ள விபரங்களைக் கொண்ட படிவம், வீட்டுப்பட்டியல் மற்றும் குடியிருப்புக்கான வரைபடம் கொண்டு வருவார். தேவையான விவரங்களை உரிய படிவத்தில் சேகரித்துக் கொள்ள அவர் கோரும் விபரங்களான பிறந்த தேதி, முழுப்பெயர், பிறப்பிட விபரம், 12 இலக்க ஆதார் எண், 28 இலக்க EID எண், 10 இலக்க கைபேசி எண், குடும்ப அட்டை எண் ஆகியவற்றை தவறாமல் அளிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தங்களின் பெயர் NPR பதிவேட்டிலும், ஆதார் அட்டையிலும் வேறுபாடாக இருப்பின் சரியான பெயர் விபரத்தினை அளித்து அதனை தற்போது சரிசெய்து கொள்ளலாம். இப்பணியில் எந்தவொரு குடியிருப்பும் விடுபடக்கூடாது என்பதால் மேற்படி காலத்தில் தவிர்க்க முடியாத காரணத்தினால் தற்காலிகமாக வெளியூர் செல்ல நேரிட்டால் கணக்கெடுப்பு நாட்களில் கணக்கெடுப்பாளர் தங்கள் பகுதிக்கு வரும் நாளில் தவறாது வீட்டிற்கு வந்து தேவையான விவரங்களை கணக்கெடுப்பாளருக்கு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இப்பணி ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பணி என்பதால் பொதுமக்கள் தங்கள் முழு ஒத்துழைப்பையும் நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**